# துன்புறுவோர் இன்புறுவர்!

*லில்லியன் ஸ்டான்லி*

**“துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; இறையரசு அவர்களுடையது”** (மத் 5:4)

துன்பமும் இன்பமும் கைகோர்த்து நடப்பரா? அவர்கள் ஆருயிர் தோழராக முடியுமா? சந்தோஷமாய் இருப்பவர்களைத்தான் உலகம் பாக்கியவான்கள் என்கிறது. திருமறை சொல்வதோ வேறு. ஆண்டவராகிய இயேசு இங்கே போதிப்பது நம்மை உளங் குளிரச் செய்கிறதா? துக்கமாயிருக்க யாருக்குத்தான் ஆசை? எல்லோருமே மகிழ்ச்சி விமானத்தில் பறக்கத்தான் விரும்பு கிறோம்.

ஒரு முதியவரது ஆசியைத் தேடிச் செல் கிறோம். அவர் நம் தலையில் கைவைத்து, “ஆண்டவரே, இவர் துன்புறட்டும்,” என்று ஆசி வழங்குவாரானால், எத்தனை அதிர்ச்சி அடைவோம்! ஆனால் திருமறை வாக்குப்படி அவர் ஆசியைத்தான் வழங்கினார். துக்கம், வலி, நோய், ஏமாற்றம், தோல்வி, கண்ணீர் வழியாய் செல்லும்போது ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக உணருகிறோமா?

வாழ்க்கையின் இரகசியங்களை தீர ஆராய்ந்த ஞானி, அரசர் சாலொமோன். வாழ்வில் மேலும் கீழும், மலைகளிலும் பள்ளத்தாக்குகளிலும், துன்பத்திலும் இன்பத்திலும், புயலிலும் அமைதியிலும், கொண்டாட்டங்களிலும், அடக்க ஆராதனைகளிலும், வெற்றிகளிலும் தோல்விகளிலும் நீந்தி வந்தவர் அவர். இந்த அனுபவங்களின் மூலம் மனித சுபாவத்தை அறிந்த அவர், “ஞானமுள்ளவரின் உள்ளத்தில் துக்க வீட்டின் நினைவே இருக்கும் மூடரின் உள்ளத்திலோ சிற்றின்ப வீட்டின் நினைவே இருக்கும்” என்றெழுதுகிறார் (பிர 7:4).

மெய் ஞானிகள் சிக்கல்களைக் கண்டு கலங்க மாட்டார், ஏனெனில் குகைப்பாதையின் முடிவில் வெளிச்சம் இருக்கும் என்பதை அவர் அறிவார். வாழ்க்கைப் புயல்களில் மறைந்திருக்கும் ஆசியை அறியாமல், தமது வேதனைக்குத் தைலம் பூச உல்லாசத்தை நோக்கி ஓடுபவர் அறிவிலிகளே. மாயையான இன்பத்தில் மயங்கி, அதின் ஆழம் தெரியாமல் காலை விடுகின்றனர். துயரத்தை ஆன்மீக ரீதியாகக் கையாளாமல் ஒதுங்கி ஒடுகின்றனர்.



வாழ்வில் துயரத்திற்கு நடத்தக்கூடிய மூன்று காரியங்களைக் காண்போம்.

1. பாவத்திற்காய் துயருறுதல், 2. தனிப்பட்டச் சிக்கல்களுக்காகத் துயருறுதல், 3. இறையரசிற்காய்த் துயருறுதல்.

ஒவ்வொன்றையும் சற்று ஆராய்வோம்.

### *1. பாவத்திற்காய் துயரம்*

சபையில் பாவம் கண்டிக்கப்படாமல் இருப்பதைக் கேள்விப்பட்ட பவுலடியார், “இதை அறிந்தும் நீங்கள் இறுமாப்புடன் இருப்பது எப்படி? துயரமடைந்திருக்க வேண்டாமா?” என்கிறார் (1 கொரி 5:2). 2 கொரிந்தியர் 7:9-11ஐ வாசிக்கும்போது இக்காரியம் சரிசெய்யப்பட்டதை அறிகிறோம். அதே மக்கள் தங்கள் மத்தியிலிருந்த பாவத்தை உணர்ந்து, “இப்போது எனக்கு மகிழ்ச்சிதான். நீங்கள் மனவருத்தம் அடைந்தீர்கள் என்பதற்காக அல்ல, மாறாக உங்கள் மனவருத்தம் மனம் மாறச் செய்தது என்பதற்காகவே மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் கடவுளுக்கு ஏற்புடைய முறையில் அந்த மனவருத்தத்தைத் தாங்கிக் கொண்டீர்கள்,” என்றெழுதுகிறார் பவுல். கடவுளுக்கு ஏற்புடைய முறையில் தாங்கிக்கொள்ளப்படும் மனவருத்தம் மீட்பு தரும் மனமாற்றத்தை விளைவிக்கிறது. இதில் வருத்தப்படுவதற்கு ஒன்றுமில்லை என்றும் எழுதுகிறார் (வச 10). துக்கப்பட்டதினால் மனமடிவடையாமல் ஊக்கத்தையும், நேர்மையைக் காட்ட ஆவலையும் உண்டாக்கியது (வச 11). ஆம், பாவ மன்னிப்பு எத்தனை மன சமாதானத்தை அருளுகிறது என்று நீங்களே அனுபவித்திருப்பீர்கள்.

ஒருவரோ அல்லது திருமறையோ நமது பாவத்தைச் சுட்டிக் காட்டும்பொழுது நமது உடனடி பிரதிச்செயல் மறுப்புத் தெரிவிப்பதோ

சாக்குப்போக்குச் சொல்வதோ அல்லது வேறொருவரைப் பழிச்சுமத்துவதாகவோ இருக்கலாம். இதனால் நாம் குற்றமற்றவர்களாக உச்சாணிக் கொம்பிலிருப்பதாக கற்பனையில் மூழ்கி நம்மை நாமே ஏய்த்துக் கொள்ளுகிறோம். இந்த சுயநீதி நம்மைச் சேற்றில் அமிழ்த்தி, இறுதி யில் புதை குழிக்கே இழுத்துச் சென்றுவிடும்.

இச்சூழலில்தான் அரசர் தாவீது சங்கீதம் 51ஐ எழுதினார். பாவக்கறை அவரை அழுத்திக் கொண்டிருந்தாலும், அவரது மயக்கத்திலிருந்து அவரைத் தட்டி எழுப்ப ஒருவர் அவசியமாயிருந் தது. நாத்தான் தீர்க்கதரிசி வந்தவுடன் ஈட்டியால் குத்தாமல் மெத்தை போட்டதுபோல் ஒரு கதையைச் சொன்னார். ஏழை ஒருவனின் செல்ல ஆட்டுக்குட்டியை பணக்காரன் ஒருவன் தனது விருந்துக்கு வெட்டின கதை. தாவீது தன்னை அங்கே நிழலாட்டமாய்க் காண்பார் என நம்பினார். சேற்றில் மூழ்கியிருந்த தாவீதுக்கு இணைக்கோடுகள் போட முடியவில்லை. “நீர் தான் அந்த மனிதர்,” என்று நாத்தான் விரல் நீட்ட வேண்டியதாயிற்று.

அதைத் தொடர்ந்த குற்றச்சாட்டுகளும் தீர்க்க தரிசனங்களும் பேரலைகளாய் தாவீதை உருட்டித் தள்ளின. தலைவணங்கி, “நான் ஆண் டவருக்கு எதிராகப் பாவம் செய்துவிட்டேன்,” என அறிக்கையிட்டார் (2 சாமு 12:1-15). அதன்பின் கவலைக்கிடங்கில் விழுந்து எழுந்து சங்கீதம் 51ஐ எழுதினார். தன்னைத் தற்காத்துக் கொள்ளாமல் தன் ஆத்துமாவை ஆண்டவருக்கு முன்பாக திறந்து வைத்துக் கதறினார். “என் குற்றங்களை நான் உணர்கின்றேன்; என் பாவம் எப்போதும் என் மனக்கண் முன் நிற்கின்றது” எனக் கண்ணீர் விட்டார் (வச 3). வெட்கத்தோடும் அழுகையோ டும் இதயத்தைக் கசக்கி, சுத்த இருதயத்திற்காகக் கர்த்தரைக் கெஞ்சினார். இரட்சகர் கிருபையும் இரக்கமும் நிறைந்தவர்; தன் கண்ணீரைக் களிப் பாக மாற்றி, தன் சாக்கு உடையை அகற்றி மகிழ்ச்சியின் ஆடையை உடுத்துவிப்பார் என்று அறிந்திருந்தார் (30:11).

இஸ்ரவேல் நாடு வழிவிலகினப் பிள்ளையைப் போல கடவுள் பற்றுக்கும் தனது பாவ விருப்பங் களுக்குமாக மாறிமாறி எப்போதுமே ஊசலாடிக் கொண்டிருக்கும். ஆனால் அவர்கள் மனந் திரும்பி விசுவாசத்தோடு திரும்பி வரும் போதெல்லாம் இறைவன் அவர்களை உடனே மன்னித்து முழு மனதோடு அரவணைத்து, “என் மக்களை ஆறதல்படுத்துங்கள்” என்பார். “அவள் போராட்டம் நின்றுவிட்டது; அவள் குற்றம் மன்னிக்கப்பட்டது” (ஏசா 40:1,2). “ஆண்டவ ரால் மீட்கப்பட்டோர் திரும்பி வருவர்; மகிழ்ந்து பாடிக்கொண்டே சீயோனுக்கு வருவர்; முடி வில்லா மகிழ்ச்சி அவர்கள் தலைமேல் தங்கும்; அக்களிப்பும் அகமகிழ்ச்சியும் அடைவர்; துயர மும் பெருமூச்சும் ஒழிந்துபோம்” (51:11,12). “உன் கண்ணீரின் நாட்கள் ஒழிந்துபோம்” (60:20). நமது காதுக்கினிய வார்த்தைகளை எரேமியா கூறுகிறார்: “அவர்களுடைய அழுகையை நான் மகிழ்ச்சியாக மாற்றுவேன்; அவர்களுக்கு ஆறுதல் அளிப்பேன்; துன்பத்திற்குப் பதிலாக இன்பத்தை அருள்வேன்” (31:13).

பாவத்திற்கான துக்கம் பரவசத்தைத் தரும். எனவேதான் ஆண்டவர் அழைக்கிறார், “இப் பொழுது உண்ணா நோன்பிருந்து, அழுது புலம்பிக் கொண்டு, உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள்” என்கிறார். “நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக் கொள்ள வேண்டாம், இதயத்தைக் கிழித்துக் கொண்டு, உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்” (யோவேல் 2:12,13). மெய்யாகவே நாம் துக்கித்தால் கர்த்தர் உடனே மன்னித்து மகிழ்ச்சியால் நம்மை நிரப்புவார். நமது மீறுதல் களுக்காக நாம் கலங்கித்தவித்தால் கர்த்தர் நம்மை உயர்த்துவார் (யாக் 4:8-10). எகிப்தி லிருந்து புறப்பட்டப் பலர் தங்கள் இதயத்தி லிருந்து எகிப்தை அகற்ற முடியாததால் வழி யிலேயே அழிந்து போனார்கள் (1 கொரி 10:5). அவர்கள் உத்தம இருதயத்தோடு பயணித்திருப் பார்களேயானால் அவர்களும் வாக்குத்தத்த தேசத்தைச் சுதந்தரித்து ஆறுதல் அடைந்திருப் பார்கள்.

### *2. சொந்த சிக்கல்களுக்காய் துயரம்*

யூதரைக் குறித்த தவறான செய்தி அரசரை எட்டியபோது, குறிப்பிட்ட நாளிலே அவர்கள் கொல்லப் படும்படியாக அரசர் கட்டளை பிறப்பித்தார்.

ஆனால் யூதர்கள் இரட்டுடுத்தி புலம்பியதைக் கண்ட இறைவன் இடைபட்டு எதிரிகளை அடக்கியதால் மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று (எஸ்தர்).

யோபுவுக்கு நிகழ்ந்ததைச் சொல்லவும் முடியாது. ஆனால் ஆண்டவர் குறுக்கிடவில்லை. நாம் துன்புறும்போது கர்த்தர் ஏன் இடைபடுவதில்லை, ஏன் அவர் அமைதி காக்கிறார், ஏன் தாமதிக்கிறார், நமது கண்ணீரைப் பார்க்கிறாரா, ஜெபங்களைக் கேட்கிறாரா, நமக்காகக் கரிசனை அவர் உள்ளத்தில் உண்டோ எனக் கூட எண்ணித் திகைக்கிறோம். சில வேளை விடுவிக்கத்தான் செய்கிறார், உடனே நன்றி காணிக்கை செலுத்துகிறோம். ஆனால் பல வேளைகளில் துன்பம் தொடர்கதை ஆகிறபடியால் நாம் புலம்பித் தவிக்கிறோம். திருமறை தெளிவாகச் சொல்லுகிறது, நாம் கர்த்தரையே சார்ந்திருந்தால், வாழ்வோ சாவோ மகிழ்ச்சியையே பரிசாகப் பெறுவோம். மூவரானவருக்கு முதுகைக் காட்டும் போதுதான் நமது நம்பிக்கை திக்குமுக்காடுகிறது.

துன்பத்தில் துவளாமலிருப்பது எப்படி? விசுவாசத்தை விசிறியடிக்காமல் வீறு நடை போட விண்ணவரின் வார்த்தை வழிகாட்டுமா என்று பார்ப்போம்.

அகத்தை ஆராய்வதில் துவங்குங்கள். விசுவாசத்தில் அணுவளவும் அசையாமல், அழுது அறிக்கையிட்டு அசுத்தத்தை அகற்றி அன்பரைப் பற்றிக் கொள்ளுங்கள். யோபு தன் உள்ளத்தை ஊற்றி அழுதது போல உங்கள் அக உணர்வுகளை அப்படியே அவர் பாதம் ஊற்றிவிடுங்கள் (யோபு 7:11). லேயாளுக்கு அன்பு கிடையாது; குடும்பத்தை அந்நிய தேசத்திலே தொலைத்தவள் நகோமி; கர்த்தர் குழந்தை பாக்கியம் அருளும் வரை அன்னாளும் ராகேலும் மலடிப்பட்டம் சூட்டப்பட்டவர்; ரூத் கைம்பெண்ணாகி மேன்மையான கணவனைப் பெற்றவள். இந்தப் பெண்களெல்லாம் துக்கித்து தங்கள் துயரங்களை இறை வேண்டலாக இறைத்து ஊற்றியவர்கள். நீதிமானாகிய யோசேப்பு காவலறையில் கலங்கினான். கொலைகாரன் சவுலுக்குத் தப்பி தாவீது தாவித் தாவி ஓடினான். நற்செய்தியின் எதிரிகளால் பவுல் விடாமல் வேட்டையாடப்பட்டு பலமுறை கொலை முயற்சிக்கும் தப்பினார். இந்த தைரியசாலிகள் நம்பிக்கையையே நங்கூரமாகக் கொண்டு நாயகரைப் பற்றிக்கொண்டனர். இயேசு மட்டும் விதிவிலக்கா என்ன? தன் சொந்த உயிரை நமது பாவங்களுக்காக தியாகம் செய்வதற்காக வலி, வேதனை, வாரடி வழியாகத் தான் சென்றார். ஆனால் துன்பத்தை துச்சமாக எண்ணி துன்புறுவோர் துயரங்களைத் துடைக்கவும், சாம்பலுக்குப் பதிலாக சிங்காரத்தையும், புலம்பலுக்குப் பதிலாகப் புத்தாடை வழங்கவும் வந்தார் (ஏசா 61:3). விக்கினங்கள் மத்தியில் விசுவாசத்தை விட்டுவிடாமல் விண்ணவரைப் பண்பாடுவோருக்கு வேதனையிலும் வாழ்வு உண்டு. ஆதாமின் அழுகையையும் அதிர்ச்சியையும் ஆதியாகமம் அறிவித்தாலும், திருமறையின் இறுதிப் புத்தகமாகிய வெளிப்படுத்தல், தெய்வபக்திக்கேதுவான துயரம் கொண்டிருந்தாலும் விசுவாசத்தை விலைபேசாமல் வீரமுடன் நிற்பவர்க்கு விண்ணகத்தில் விண்ணதிர மகிழ்ச்சிக் கொண்டாட்டம் நிச்சயமே என்கிறது.

### *3. இறையரசிற்கான துயரம்.*

சவுலுக்காக தீர்க்கர் சாமுவேல் துக்கித்தார் (1 சாமு 15:35). சவுலை அரசனாக்கியதற்காகத் தூயவரும் துக்கித்தார். அரித்து எடுக்கப்பட்ட அரசன் தங்கள் எதிர்பார்ப்பை சீர்குலைத்து விட்டானே என்று இருவருக்கும் கவலை. சாமுவேல் ஏன் துயருற வேண்டும்? அவருக்கு இறையரசைக் குறித்த கரிசனை. எருசலேமையும் அதின் மதில்களையும் குறித்துக் கேள்விப்பட்ட நெகேமியா இறையரசிற்காகக் கலங்கினார். அதோடு நிற்கவில்லை. துடிப்புடன் மதில்களைக் கட்டத்துவங்கினார். முடிவோ மகிழ்ச்சி முழக்கம்! இறையரசை திரும்பக் கட்டும் பணியில் இதுவே முதல்படி. சீக்கிரமே திருமறைப் போதகர் எஸ்றா திருச்சட்டத்தை மக்களுக்குப் போதிக்க, அவர்கள் பாவத்திற்காய்ப் புலம்பி அழுதனர். அந்த மனத் திருப்பம் மந்தமாருதமாக மாறிற்று.

தானியேல் 21 நாட்கள் விருந்துண்ணாமல் தனக்காகவும் மக்களுக்காகவும் இரக்கத்திற்காய்

கெஞ்சிக்கொண்டிருந்தார். ‘‘இறைவா! கேளும்; என் தலைவரே! மன்னித்தருளும்; என் தலைவரே! செவி கொடுத்துச் செயலாற்றும்; என் கடவுளே! உம்மை முன்னிட்டுக் காலந் தாழ்த்தாதேயும்’’ எனப் புலம்பினார் (தானி 9:19). கர்த்தர் அவரது விண்ணப்பத்தைக் கேட்டு பல வெளிப்பாடுகளைக் கொடுத்தார். அவை திருமறையில் இணைந்தன. இறைவனின் கவனத்தை தானியேல் ஈர்த்தது எப்படி? மத்தேயு 5:4இல் அதற்கு விடையைக் காணலாம்: ‘‘துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.’’ தனக்காக அல்ல, இறையரசிற்காக தானியேல் துக்கித்தார்; தேற்றப்பட்டார்!

அவரது சீடர் ஏன் நோன்பிருப்பதில்லை என்று யோவானின் சீடர் இயேசுவை வினவியபோது மாப்பிள்ளை தங்களோடிருக்கும்போது திருமண விருந்தினர் துக்கிப்பரா என்று (தன்னைக் குறித்துப் பேசிவிட்டு) பதிலளித்தார். மாப்பிள்ளை அவர்களை விட்டுப் பிரியும் காலம் வரும். அப்பொழுது மனம் வருந்துவர் என்றார். இயேசுவின் சிலுவை மரணத்திற்குப் பின்னர் இது அப்படியே நடந்தது. ஆனால் லூக்கா 24:52இல் நாம் வாசிப்பதென்ன? ‘‘அவர்கள் அவரை வணங்கி விட்டுப் பெருமகிழ்ச்சியோடு எருசலேம் திரும்பிச் சென்றார்கள்.’’ உயிர்த்தெழுந்த ஆண்டவரைக் கண்டு ஆனந்தக் கூத்தாடினர்.

கடவுளைச் சேவித்து என்னத்தைக் கண்டோம் என்பது சிலரது அங்கலாய்ப்பு. அவரது திருமுறைகளைக் கடைபிடித்து அவரது திருமுன் வருந்தி நடந்துகொண்டதால் என்ன பயன், என்று நினைக்கின்றனர் (மல் 3:14). ஆனால் பரிசுத்தர் சொல்வதைக் கேளுங்கள்: ‘‘ஆண்டவருக்கு அஞ்சி நடந்து அவரது பெயரை நினைத்து வாழ் வோருக்கென நினைவு நூல் ஒன்று அவரது திரு முன் எழுதப்பட்டது. நான் செயலாற்றும் அந்நாளில் அவர்கள் எனது தனிப் பெரும் சொத்தாக இருப்பார்கள்’’ என்கிறார் படைகளின் ஆண்டவர். ஒரு தந்தை தனக்குப் பணிவிடை செய்யும் மகன் மீது கருணை காட்டுவது போல் நான் அவர்கள் மீது கருணை காட்டுவேன். அப்போது நீங்கள் நேர்மையாளர்க்கும் கொடியோர்க்கும், கடவுளுக்கு ஊழியம் செய்வோர்க்கும் அவருக்கு ஊழியம் செய்யாதோர்க்கும் உள்ள வேற்றுமையை மீண்டும் கண்டுகொள்வீர்கள்’’ (வச 17,18). அதாவது, அவர்களது மனமடிவு மனமகிழ்ச்சியாகும். எனவே இறையரசிற்காக துக்கிக்கும்போது துவண்டுவிட வேண்டாம்.

மனமேட்டிமையினால் மார்தட்டி நின்ற ஆமானுக்கு ஆனதென்ன? அவமானத்தினால் தன் தலையை முக்காடிட்டுக்கொண்டு அமைதியாய் நழுவினான் (எஸ்தர் 6:12). சற்றுக் கால தாமதமானாலும் மகிழ்ச்சியின் உச்ச சிகரத்தை எட்டு வோம். அதுவரை பொறுமையாயிருங்கள். யோசேப்பு தாங்கொணா துன்பங்களையும், கொடுமைகளையும் சகித்தாலும் பின்பு மகிழ்ச்சியின் ஊற்றிலே மிதந்தான். ஆண்டவராகிய இயேசு எருசலேமைப் பார்த்துக் கண்ணீர் வடித்தார். லாசரு மரித்தபோது அழுதார். மனிதரின் கடின இருதயத்தைக் கண்டு கலங்கினார். ஆனாலும் தமது தெய்வீக அழைப்பை விட்டு ஒரு அடியும் பின்வாங்கவில்லை. அவருடைய கண்கள் தாம் அடையவிருந்த மகிழ்ச்சியிலேயே லயித்திருந்தன (எபி 12:2). அவரது கவனமும் தரிசனமும் அதுவாகவே இருந்தது. இறையரசிற்காக அவர் அனுபவித்தத் துயரம் அவருக்கு மகிழ்ச்சியையும் நமக்கு இரட்சிப்பையும் பரிசளித்தது.

நமது அழைப்பிற்கு உண்மையாயிருப் போமானால் நமது பாடுகளும் உறுதியும் பெரும் பரிசுகளை வெல்லும்.

நமது பாவங்களுக்காய் அழுவோமானால் அலங்கரிக்கப்படுவோம்!

நமது தொல்லைகளைத் தாங்கிக் கொள் வோமானால் தென்றல் வீசத் துவங்கும்!

இறையரசிற்காய் கவலைப்படுவோமானால் கானம் பாடுவோம்!

□